## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண். 257/2015

2023–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12–ஆம் நாள் வியாழக்கிழமை வா.சா.1. (1969–ஆம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.புவனேஸ்வரி, மூன்றாம் நிலை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதாகிருஷ்ணன் | சமயம் | : |
| த/பெ | : துரையப்பன் | வயது | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | மாவட்டம் | : |

---

வா.சா. 1–ன் முதல் விசாரணை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார். நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். 21.06.1955 ல் என் தந்தை பெயரில் ஏற்பட்டுள்ள கிரய பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள வாய்தா ரசீதுகள் (கோர்வை 2) **வா.சா.ஆ.2** ஆகவும், 07.08.2015 ல் மீன்சுருட்டி காவல் நிலையத்தில் நான் 6 முதல் 10 பிரதிவாதிகள் மீது கொடுத்த புகாரின் நகல், புகாருக்கான ரசீது **வா.சா.ஆ.3** ஆகவும், 22.07.2015 தேதியில் த.பழூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கொடுத்த உத்தரவு **வா.சா.ஆ.4** ஆகவும், 29.06.2015 தேதியில் அரியலூர் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு மற்றும் மனு ஏற்பு சான்றிதழ் **வா.சா.ஆ.5** ஆகவும், 06.07.2015 தேதியில் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு மற்றும் மனு ஏற்பு சான்றிதழ் **வா.சா.ஆ.6** ஆகவும், என் தந்தையின் இறப்பு சான்றிதழ்

**வா.சா.ஆ.7** ஆகவும், என் தந்தையின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.8** ஆகவும், 14.07.1941 தேதியிட்ட கிரய ஆவணம் அசல் **வா.சா.ஆ.9** ஆகவும், 12.01.2015 மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவிற்கான ஏற்பு சான்றதழ் **வா.சா.ஆ.10** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது, தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

(ஒப்பம்)திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.